Institute of Shivanarthanalayam

proudly presents

# Bharathanatya Arangetram

**Nishanthini Rasanathan**

*Disciple of Smt. Sivaraji Sivakumar*

*16th December 2012*

*Winston Churchill Hall*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Institute of Shivanarthanalayam

proudly presents

# Bharathanatya Arangetram

of

## Nishanthini Rasanathan

Disciple of

Srimathi Sivaraji Sivakumar

Chief Guest

Thirumathi Vasunthara Sivasothi

Speical Guest

Sri Amuthu Arasan OFFAL Co-ordinator UK

on

16th December 2012

at

Winston Churchill Hall



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் குருவிற்கு கோடி வந்தனம்

பரதநாட்டியம் இன்று உலகெங்கும் பரவலாகப்போற்றப்படும் பாரம்பரியம் மிக்க ஒரு கலையாகும். இக்கலை ஆடற் கடவுளாகிய சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கலை. இக்கலை எனக்கும் கிடைத்தது என நினைக்கும்போது மிகவும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பரதத்தைக் கற்றுகொள்ளும் அனைவருக்கும் அரங்கேறும் பாக்கியம் கிடைப்பது அரிது. எனக்கு இப்பாக்கியம் கிடைத்தமைக்கு கடவுளுக்கும் என் குருவிற்கும் என் அம்மாவிற்கும் கோடி நன்றிகள்.

எனது குரு திருமதி சிவறஜி சிவகுமார் அவர்கள் "திலகநர்த்தனாலய"வில் தனது நடனத்தைக் குருகுலம் மூலம் முறைப்படி கற்று "கலாவித்தகர்" என்னும் பட்டம் பெற்றவர் ஆவார். இவர் இன்று இலண்டனில் "சிவநர்த்தனாலயம்" என்னும் நடனப் பள்ளியை நடத்தி வருகிறார். தான் கற்ற கலையை தனது மாணவர்களுக்கும் பயிற்றுவித்து வருகிறார்.

நான் இந்தியாவில் "கலாகேந்திரா" என்னும் கலைக்கூடத்தில் எனது முதல் குருவாகிய திரு நிதீஸ்குமார் என்பவரிடம் முறைப்படி பயின்ற நடனக்கலையை லண்டன் மாநகரில் வந்து திருமதி சிவறஜி சிவகுமாரிடம் ஐந்து வருடங்களாகக் கற்றுக் கொண்டு இன்று அரங்கேற்றம் காணுகிறேன் என்பதை நினைத்து மிகவும் பெருமிதமடைகிறேன்.

எனது குரு எனக்கு குரு மட்டுமல்லாது, நல்ல தோழியாகவும் தாயாகவும் அன்பு செலுத்துவார். தவறுகள் செய்தாலும் கோபம் காட்டாது மிகவும் அன்புடன் கற்றுத்தருவார். இப்படி ஒரு குரு கிடைத்தமைக்கு கடவுளுக்கும் என் அம்மாவிற்கும் நன்றிகள்.

பரதம் என்னும் கலையை எனக்கு கற்பித்து என்னை இவ்வளவு தூரம் வழிநடத்தி, நம்பிக்கை ஊட்டி என்னை இன்று அரங்கேற்றும் என் குருவிற்கு நான் பெருமையும் புகழும் ஈட்டித்தருவேன் என்ற நம்பிக்கையோடு எனது குருவிற்கு எனதும் என் குடும்பத்தினரதும் சார்பாக கோடி நன்றிகளைத் தெரிவிப்பதோடு ஆடல் தலைவனாகிய தில்லைக்கூத்தனின் பாதங்களைப் பணிந்து என் குருவிற்கு கோடி வந்தனங்களை தெரிவிக்கின்றேன்.

நன்றியுடன்
**நிஷாந்தினி இராசநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவின் நல் ஆசிகள்

அம்பலக்கூத்தனின் திருவடிகளில் மலர்ந்த அற்புதமான ஒரு கலை பரதம். பிரமனிடம் பரதமுனி பயின்ற கலை கவின் நிறை நான்கு அபிநயமும் நிறைந்த கலை. பார்ப்பவர்கள் தங்களை மறந்து பார்க்கும் கலை. அப்படியான மகத்தான கலையை சிவனர்த்தனாலயம் என்ற கலைக்கூடத்தில் 2007ம் ஆண்டு முதல் பயின்று இன்று அரங்கத்தில் தனது அரங்கேற்றத்தைக் காணும் செல்வி நிஷாந்தினி இராசநாதன் அவர்களின் அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற தில்லைக் கூத்தனின் அருள் வேண்டி ஆசீர்வதிக்கின்றேன்.

2004ம் ஆண்டு இலண்டன் மாநகரில் ஆரம்பிக்கப்பட்ட சிவநர்த்தனாலயம் மூலம் இன்று தனது முதலாவது மாணவி நிஷாந்தினியின் அரங்கேற்றம் காண்பதில் மிகவும் பெருமை அடைகின்றேன். தென்மராட்சியின் வரணி மண்ணில் பிறந்து சென்னையில் வளர்ந்து அங்கே தனது நடனக்கலையை தொடங்கினார் நிஷாந்தினி. 2007ம் ஆண்டு சிவநர்த்தனாலயத்தில் சேர்ந்தார். மிகவும் பண்பும் பணிவும் அடக்கமும் நிறைந்த நிஷாந்தினி தரம் 4ல் இருந்து தரம் 8 வரை என்னிடம் பயின்று எல்லாப் பரீட்சையிலும் விசேட சித்திபெற்று OFAAL வழங்கும் "கலாஜோதி" என்ற பட்டத்தையும் பெற்றவர் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன்.

அத்துடன் வாய்ப்பாட்டிலும் தரம் 4 வரை விசேட சித்திபெற்ற மாணவி. அது மட்டுமன்றி நிஷாந்தினியின் தனித்திறமை ஓவியம் வரைதல். அழகாக ஓவியங்கள் வரைவதில் மிகத் திறமைசாலி என்பதை மிக உவகையுடன் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அது மட்டுமன்றி திரு திருமதி இராசநாதன் அவர்களும் மிகவும் கடவுள் பக்தியும், குருபக்தியும் உடையவர்கள். குருவை குருவாக மதித்து தனது மகளின் அரங்கேற்ற முழுப்பொறுப்பையும் என்னிடம் ஒப்படைத்த ஒரு உதாரண பெற்றோர் என்பதை இந்த இடத்தில் நான் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

திலகநர்த்தனலயாவின் சாஸ்திர நெறியுடனும், வரன் முறையுடந்தனும் எனது குரு திருமதி. வசுந்தரா சிவசோதியிடம் தரம் 3 வரை பயின்று அதன் பின் குரு ஸ்ரீமதி யசோதரா விவேகானந்தனிடம் குருகுல முறையில் நான் பயின்ற கலையை இன்று நிஷாந்தினிக்குக் கற்பித்து அரங்கேற்றம் செய்யத் தில்லைக் கூத்தனின் ஆசீர்வாதம் கிடைத்ததை எண்ணி, என் குருவின் பாதத்தையும், தில்லைக்கூத்தனின் பாதத்தையும் பணிந்து எனது மாணவி நிஷாந்தினியின் கலைப்பயணம் இத்துடன் நின்றுவிடாமல் தொடர வேண்டும் என்று ஆசீர்வதிக்கின்றேன்.

திரு. திருமதி இராசநாதன் தம்பதிகளின் அன்பு மகளும் நிஷாந்தனின் அன்பு தங்கையுமாய், சிவநர்த்தனலயாவின் முதல் மாணவியாய் இன்று நீ உனது பதம் தூக்கி ஆடும் ஆடல் கலைத்துறையில் ஒரு அழியாத ஓவியமாக என்றுமிருக்க கலைமகள், தில்லைக்கூத்தன் ஆசீர் வதிப்பார்கள்.

கலாவித்தகர்
திருமதி சிவரஞ்சி சிவகுமார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி



ஐந்தொழில்களையும் உள்ளடக்கிய நடராஜப் பெருமானின் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் தத்துவம், பொதிந்ததொரு அற்புதமாகும். இந்த அற்புதத்தின் வெளிப்பாடே, ஆண்டவன் திருப்பாதத்தில் மலர்ந்த பரதக்கலையாகும். உணர்வுகளின் வெளிப்பாட்டை ரஸபாவங்களாகப் பிரதிபலிக்கும் அதே வேளை கருத்துக்களை அபிநய ஹஸ்தங்கள் இனம் காட்ட பாதங்கள் தாளம் தவறாது இயங்குதல் பரதக்கலையின் தனிச்சிறப்பு.

இத்தகைய பெருமை பெற்ற இந்த அழகுக்கலை, அழகியலினூடாக ஆத்மீகத்தை நிலை நிறுத்தும் பாங்கு போற்றுதற்கரியதாகும். அபிநய பாவமும், ஆடற் சிறப்பும், தாள லயப் பரிணாமமும் ஒன்றிணைந்து பரதக்கலையாக வடிவெடுத்து இன்று பார்போற்றும் தெய்வீகக் கலையாக மிளிர்வது இறைவனின் அற்புத செயலே.

இந்த தெய்வீகக்கலை இன்று இனமத, மொழி, வேறுபாடின்றி சகலராலும் ஆடக்கூடிய கலையாகப் போற்றப்படுவது கண்கூடு. பாவ உணர்வும் ராக வளமும், தாளலயமும் இணைந்து கண்ணுக்கு விருந்தாக, மனதுக்கு மருந்தாக பக்தியோடு பக்குவமும் கலந்து மிளிரும் பரதக் கலை, தமிழர் பண்பாட்டுக்கலையாக உலகில் வலம் வருவது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் இலண்டன் மாநகரில் நடன அரங்கேற்றம் செய்யும் செல்வி நிஷாந்தினி இராசநாதன் பாராட்டுதற்குரியவராவார். வெளிநாட்டுக் கலாச்சாரத்தின் மத்தியில் தமிழ் பண்பாட்டுக்கலையான பரதநாட்டியத்தைக் கற்று அரங்கப்பிரவேசம் செய்யும் நிஷாந்தினியின் கலை ஆர்வம் வரவேற்கத்தக்கது. நிஷாந்தினியின் கலை ஆர்வத்தை மதித்து அரங்கேற்றம் வரை வழிநடத்திய பெற்றோர் திரு திருமதி இராசநாதன் அவர்கள் நல்லதொரு குருவை இனம் கண்டு வழிகாட்டியுள்ளனர்.

நிஷாந்தினியின் குருவான திருமதி சிவரஜி சிவகுமார் அவர்கள் திலகநர்த்தனாலய மாணவியாக பல நடன நிகழ்ச்சிகளில் பங்கேற்று தன் கலைத்திறமையை வெளிப்படுத்தியவர். பரதநாட்டியத்தில் "கலாவித்தகர்" பட்டம் பெற்ற இவர், லண்டனில் சிவநர்த்தனாலயம் என்ற நடன நிறுவனத்தை 2004ம் ஆண்டு ஆரம்பித்து நடனக் கலைக்கான தனது பணியைத் தொடர்ந்து வருகின்றார். இன்று தனது முதுல் மாணவியான நிஷாந்தினியை, அரங்கேற்றம் வரை வழிநடாத்திய சிவரஜியின் கலைப்பணியை பாராட்டுகின்றேன். சிவநர்த்தனாலாயத்தில் 5 வருடங்களாக இக்கலையை பயின்று வரும் நிஷாந்தினியின் அரங்கேற்றம் சிறக்க, அவர் தம் குருவும், எனது மாணவியுமான சிவரஜி அவர்களின் கன்னி முயற்சி வெற்றி பெற எல்லாம் வல்ல கூத்தப் பெருமானை வணங்கி ஆசீர்வதிக்கின்றேன்.

"அழகியல் இரசனையும் ஆன்மீக உணர்வும் பரதக் கலையின் பவித்திரமான பண்புகள்"

***நாட்டியக் கலைமணி***
***திருமதி யசோதரா விவேகானந்தன்***
***அதிபர் - திலக நர்த்தனாலயம்***

## அம்மம்மாவின் ஆசிச் செய்தி



கடல் கடந்து வந்தும் எம் தமிழரின் பெருமைக்குரிய கலை கலாச்சாரத்தையும் பார் எங்கும் பரப்பும் கலைகளில் ஒன்றாகிய பரத நாட்டியத்தை பயின்று இன்று அரங்கேற்றம் காணும் எனது அன்புப் பேத்தியின் கால்கள் நடனமிடுவதை பார்க்கும் பாக்கியம் எனக்கு கிடைத்ததை எண்ணி நெஞ்சம் பூரித்துப் போய் இருக்கிறது.

சிறுவயதிலிருந்தே அவரின் விடாமுயற்சியும் தன் நம்பிக்கையுமே காரணம். இவரின் முன்னேற்றத்திக்கு பெருந்துணையாய் இருந்து வழிவகுத்துக் கொண்டிருப்பவர்கள் பெற்றோர்களே என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இவ்விதத்தில் பெற்றோர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவருக்கு இக்கலையை பயிற்றுவித்த குருவும் பாராட்டப்பட வேண்டியவர். இத்துடன் நின்றுவிடாமல் மேலும் படித்து பல பட்டங்கள் பெற்று நீடுழி வாழ ஈலிங் கனகதுர்க்கை அம்மன் அருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

***அன்புடன்,***
***அம்மம்மா***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம விருந்தினர் ஆசிச் செய்தி

**"துச்சமானது எனக் கருதப்படும் சரீரத்தை தெய்வீகமாக்குவது தான் பரதக் கலை"**

– திருமதி பாலசரஸ்வதி



கலை என்பது மனிதர்களின் பண்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்தம் ஒரு கருவியாகும். எந்த அளவிற்கு ஒரு மனிதன் தன் கலையுணர்வை வளர்த்துக் கொள்கின்றானோ அந்த அளவிற்கு அவன் வாழ்க்கையை அனுபவிக்கக் கற்றுக் கொள்கின்றான். மனிதன் உருவாக்கிய கலைகளில் மிகப் பழமை வாய்ந்ததென்ற பெருமை நடனக் கலைக்கே உரியது. பாடல் தாளம், ஆடல், இசை, நடிப்பு, ஒப்பனை எனப் பல கலைகளை உள்ளடக்கிய ஒரு கூட்டுக் கலையாக பரதக்கலை வளர்ச்சியடைந்துள்ளது. அது மட்டுமன்றி சிற்பம், ஓவியம், கட்டிடம் அகிய கலைகளுக்கு ஆதரவாகவும் அமைந்துள்ளது. இந்த வகையில் கலைகளுள் முதன்மைக் கலையாக நாட்டியத்தைக் குறிப்பிடலாம்.

இத்தகைய மேன்மைமிக்க பரதக்கலையை அதன் சிறப்புத்தன்மையைக் கருத்தில் கொண்டு அதன் தூய்மை கெடாது கற்றல் - கற்பித்தல் பிராமற்றம் நடைபெறுமானால், வெளிநாடுகளில் அந்நியமொழி கலை கலாச்சாரம் என்பவற்றிற்கு மத்தியில் தாய்மொழி கலை கலாச்சாரம் என்பவற்றைத் தூக்கி நிறுத்தும் ஒரு கருவியாக நடனக் கல்வி நிகழும் என்பதில் ஐயமில்லை.

இன்று அரங்கேற்றம் காணும் செல்வி நிஷாந்தினி இராசநாதனின் ஆசிரியை திருமதி சிவராஜி சிவகுமார் இலங்கையின் தென்மராட்சிப் பகுதியில் இயங்கிய திலகநர்த்தனாலயம் என்ற கலைக்கோவிலில் தனது நடனக் கல்வியை என்னிடம் முறையாக ஆரம்பித்தார். நான் வெளிநாடு வந்துவிட்டபோதும் என் சகோதரி யசோதரா விவேகானந்தனிடம் முறையாகப் பயின்று சிறப்பான அரங்கேற்றத்தைக் கண்டவர். "கலாவித்தகர்" என்ற பட்டத்தைப் பெற்றவர். இன்று அவரது முதுல் மாணவியின் அரங்கேற்ற மலரில் ஆசிச்செய்தி அளிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நிஷாந்தினி! அரங்கேற்றமென்பது ஆரவாரமான விழாவல்ல, கலை வாழ்வின் புனிதமான தொடக்கம்! இன்றைய உங்கள் அரங்கேற்றம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன், கற்ற கல்வியையும், கற்பித்த குருவையும் என்றும் மறவாது, பரதக்கலையின் தெய்வீகப்பண்பு மாறாமல் எதிர்காலத்தில் சிறந்த நர்த்தகியாகத் திகழ எனது ஆசியும் அன்பும் என்றும் உரித்தாகுக.

வளர்க, தெய்வமாக் கலை!

**திருமதி வசுந்தரா சிவசோதி** B.A., Dip. in Dance Education
**அதிபர், திலக நர்த்தனாலயம்**
**ஜேர்மனி**

# Message from Mr. Nidheesh Kumar



Nidheesh Kumar Post Graduate from RDCFA
Thiruvanmiyure, Chennai 600047

When I was started my profession as a teacher in the field of Bharathanatyam, I have been really fortunate to have students like Nishanthini, Who has highly passionate, sincere and hardworking in my class, As we know it is not easy to learn dance while appearing for higher studies. But she has proved her proficiency both in dance and studies. Here I am proudly proclaim as she is "my student" who will prove herself on the stage.

Here I would like to quote: Aacharyat padamadathe
Padam Sishya Swamedhaya
Padam Sa Brahmacharibhya
Padam Kalakramena cha

Only a quarter of your learning comes from the Teacher.
The next quarter of the knowledge comes from within due to the hard work of the taught.
Another quarter comes from the association with good classmates.
The balance quarter comes with the passage of time.
These are the four stage of the journey [....]

I look forward for a promising future so I myself and my family convey all the very best for your 'ARANGETRAM' and a bright future to experience the essence of NATYA

With love,
Nidheesh

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| கடவுள் வணக்கம் | |
| அலாரிப்பு | இராகம் : நாட்டை<br>தாளம் : திஸ்ர ஏகம் |
| ஜதீஸ்வரம் | இராகம் : இராகமாளிகா<br>தாளம் : மிஸ்ரசாப்பு |
| ஸப்தம் | இராகம் : இராகமாளிகா<br>தாளம் : மிஸ்ரசாப்பு |
| வர்ணம் | இராகம் : தேவமனோகரி<br>தாளம் : ஆதி |
| | **இடைவேளை** |
| பதம் | இராகம் : தர்மாவதி<br>தாளம் : ஆதி |
| பதம் | இராகம் : கம்ஷாநந்தி<br>தாளம் : ஆதி |
| கீர்த்தனம் | இராகம் : வசந்தா<br>தாளம் : கண்ட ஏகம் |
| தில்லானா | இராகம் : சிவரஞ்சனி<br>தாளம் : ஆதி |
| | மங்களம் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Oriental Fine Arts Academy
London

International Examination
2011

This is to certify that

Nishanthini Rasanathan

has been awarded

Diploma in Bharathanatiyam

and obtained the title of

Nattiya Kalajothy

Chief Examiner

Examination Committee













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Teacher
### Smt Sivaraji Sivakumar
**Naddiya Kalaviththagar**



## Vocal Master
### Shri V. A. Aravindakshan

A senior Carnatic Vocal and Indian classical dance music artist. With more than 30 years of singing and performance experience in the Indian classical music field he is considered as an eminent personality and respected by several other icons in the Indian music and dance field.

He has accompanied the Dhananjayans, Smt. Padma Subramaniam, Smt. Chitra Vishweshwaran to name a few on their dance ventures. He received education in Carnatic Vocal Music from eminent Gurus such as Shri T. J. Vijayaraman (Late) (Father), Smt. M. S. Subbulakshmi (Late), Shri. Semmangudi Srinivasa Iyer (Late), and Shri. Dr. D. K. Jayaraman (Late), again a few from the massive list of Gurus who have taught him the art of singing. He has been awarded with the Ganabooshanam title by Sree Swathi Thirunal College of Music, Thiruvananthapuram where he was a student of Carnatic Vocal Music.

He has accompanied Shri Pandit Ravishankar, the Sitar Maestro and Ustad Amjad Ali Khan the Sarod Maestro in their individual performances in Northern India. He has also worked in a Western and Carnatic Music fusion album The Natraj, which involves music artists from the USA.

He currently works for the West London Tamil school and Harrow Tamil school in London as a music teacher in an attempt to give back what he has learnt to the younger generation of musicians.



## Miruthangam
### Sri J. Padmanaban

He trained in the ancient Gurukula System for 12 years under Guru Kodaiyidi Sri. S.P.Govindaraju. Resident teacher at "The West London Tamil School", professional training in Tamil Nadu Govt. Music College, obtained the title "Vadhya Kalaimani" with Distinction. He worked in the Bharathanatyam Dept. of Govt. Music College as Mridangam Teacher and accompanist since 1997. He conferred the Title "Nadha Kala Vipanchee" by Dr. M. Balamurali Krishna and the title "Kalaimamani" by Govt. of Tamil Nadu.

## Violin
### Sri Sithamparanathan Jalatharan



Sithamparanathan Jalatharan started learning Violin at age of 7 and completed Arangetram 2003. He completed Music Academy of Chennai-India (1997- 2003) and taught by Mr. Melakaveri Thiyagarajan and Mr. VVS Murari Partially. He graduated from Academy in First Class as well as Chennai University in BCA.

S. Jalatharan has been awarded the titles of 'Isai Kalaimani'. He participated national youth cultural compition in 1998 and he got 1st place awarded from Sri Lanka president in the same year.

Two of his students have had Violin Arangetram and have completed Diplomas in Violin. He has also been an adjudicator for many competitions and an examiner for exam boards in the UK and Sri Lanka.

S.Jalatharan has given performances in many reputed sabhas, Arangetram and concerts in India, Sri Lanka and London. He participated RUPAVAHINI T.V , S.L.B.C, SUN T.V, JEYA T.V. He resides and teaching at the London Tamil Center, Croydon Academy of Eastern Arts and Brent Tamil School since 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Flute
## Yatheesan Selvakumar



Yatheesan was exposed to a musical atmosphere at a very young age. After several years of training he staged his graduation concerts on both Mridangam and Flute under the tutelage of Shri P Kirupakaran and Shri P Gnanavarathan respectively.

Yatheesan has won several competitions and delivered exceptional solo performances in the UK and abroad. He accompanied several well known artistes, Shri O S Arun, Shri K Rajasekharan, to name a few, for Bharathanatyam Arangetrams.

At present, Yatheesan has close contacts with Shri S Shashank learning the technical aspects of the Flute. He is a regular visitor to Chennai, India in December Katcheri season to perform in their sabas.

## Veena
## Selvi Sowmyah Anandanadesan



Selvi Sowmyah Anandanadesan started to learn the Veena at the tender age of 6 under the tutelage of Smt Sivatharini Sahathevan and Smt Varathalaxmy Balachandran. She is currently training further under the guidance of Smt Sivatharini Sahathevan. She also learns Carnatic Vocal and has been under the tutelage of late Mrs. Nageshwari Bramanantha since the age of 4. She completed her Guru Samarpanam (Arengetram) in August 2007 under the guidance of Smt. Sivasakthi Sivanesan. Thereafter had further training from Sri V A Aravindakshan and is currently learning from Sri Manipallavam K Sarangan. Sowmyah also plays the saxophone and learns the Mirthungam from her father Shri K Anandanadesan. She has performed for many Arengetram Samarpanams, concerts and festivals from a young age. Sowmyah has been a resident Vocal teacher at Middlesex Tamil School since 2008.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சமாசத்தின் உபதலைவரும்
சாவகச்சேரி பிரதேச சபையின் தலைவரும், முன்னாள் வரணிக்கோத்தணி அதிபருமான
**திரு சிற்றம்பலம் துரைராசா அவர்களின் ஆசிச் செய்தி.**



வரணி மண்ணின் புகழ்பூத்த கோவில்வயல் திரு கந்தையா உடையாரின் மகன் முருகேசுவின் மகளாகிய திருமதி கமலாம்பிக்கை இராசநாதன் அவர்களை இங்கு வரணியில் அறியாதவர்கள் எவரும் இல்லை என்றே கூறலாம். அத்தகைய பெரியார் அவர்களின் மகள் செல்வி நிஷாந்தினி இராசநாதன் இப்படி ஒரு அரங்கேற்றம் நிகழ்த்துவது எமக்கும் வரணிக்கும் பெருமைசேர்க்கும் விடயமாகும்.

அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றாக விளங்கும் ஆடற்கலையான பரதக்கலை பலராலும் என்றும் போற்றப்படுகின்ற தொன்மையான கலை, இந்தப் பரதக்கலை காலாகாலமாக யாழ்ப்பாண மண்ணில் பாரம்பரியமான கலைகளில் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. புலம்பெயர்ந்த யாழ்ப்பாணத் தமிழர்கள் வெளிநாடுகளில் வசிப்பதனால் கலாச்சாரம் சார்ந்த நிகழ்ச்சிகளை நடாத்துவது மட்டுமல்லாது தமது பிள்ளைகளுக்கும் தமிழ்க்கலைகளை கற்றுக் கொடுப்பதற்கும் ஆர்வம் காட்டுகின்றனர். இது மிகவும் போற்றக்கூடிய விடயம் ஆகும்.

செல்வி நிஷாந்தினி இராசநாதன் அவர்கள் நடனக்கலையின் ஆரம்பப்படியான புஸ்பாஞ்சலியைத் தொடங்கி பல ஆண்டுகள் இக் கலையின் மிக ஆர்வத்துடன் பயின்று உயர்தரத்தினையடைந்த பின்னர் இவ் அரங்கேற்றத்தினை நிகழ்த்துவது பெரிதும் வரவேற்பிற்கும் மகிழ்ச்சிக்கும் உரியதாகின்றது.

இத்தகைய தரத்திற்கு செல்வி நிஷாந்தினி இராசநாதனை வளர்த்த பெருமை அவரின் ஆசிரியையான திருமதி சிவறஜி சிவகுமார் அவர்களையும், அவரது கலைக்கூடமான சிவநர்த்தனாலயத்தினையுமே சாரும். ஆசிரியையான திருமதி சிவறஜி சிவகுமார் அவர்களின் அர்ப்பணிப்பையும், ஊக்கத்தையும் நாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.

செல்வி நிஷாந்தினி இராசநாதன் மேலும் இத்துறையில் உயர்ச்சி பெற்று புகழும் சிறந்த ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும், சகல செல்வமும் பெறவேண்டும் என எனது மனப்பூர்வமான ஆசிகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

நன்றி

சிற்றம்பலம்.

**திரு பேரம்பலம் பாலசுப்பிரமணியம்**
அகில இலங்கை சமாதான நீதவானும், சத்தியப்பிரமாணம் பெற்ற தமிழ் / ஆங்கில மொழிபெயர்ப்பாளரும் அவரது பாரியார் **திருமதி சாந்தகுமாரி** அவர்களினதும் உளங்கனிந்த ஆசியுரை.



இந்து மகா சமுத்திரத்தின் "முத்து" என போற்றி புகழப்படும் எமது ஈழத்திருநாட்டின் சிகரமாக அமைந்து, கல்வி கலாச்சாரம், பண்பு போன்ற சிறப்பம்சங்கள் நிறைந்த யாழ்ப்பாணத்தின் சீர்மிகு தென்மராட்சியின் புகழ்பூத்த கிராமமாகிய வரணியிலுள்ள கரம்பைக் குறிச்சியை பிறப்பிடமாகக் கொண்ட திருநிறைச் செல்வி நிஷாந்தினி இராசநாதனின் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சி எதிர்வரும் 16.12.2012 தினத்தன்று இலண்டன் மாநகரில் இடம் பெறவுள்ள அவரது இந்நிகழ்ச்சி இனிதே நிறைவேற எமது இதயம் நிறைந்த நல்லாசிகளைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

செல்வி நிஷாந்தினி சிவநர்த்தனாலயம் என்ற நடனப்பள்ளியின் நடன ஆசிரியை திருமதி சிவறஜி சிவகுமார் எனப் பெயர் படைத்த நர்த்தகியிடம் நடனம் பயின்று தனது அரங்கேற்றத்தை சிறப்புற 16.12.2012ல் நிறைவேற்ற உள்ளார் என்பதை அறியும்போது பேருவகையடைகின்றோம்.

இவரது பெற்றார்களாகிய திரு இராசநாதனும் திருமதி கமலாம்பிகையும் நிஷாந்தினி போன்ற கலையார்வம் நிறைந்த புதல்வியை பெற்று வளர்த்து நடனக்கலையில் புகழோடு ஈடுபடவைத்து அரங்கேற்றம் வரை கொணர்ந்தமையை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த உன்னத நிலைக்கு தமது புதல்வியை உயரவைத்தமைக்கு அரும்பாடுபட்டமையை நாம் நன்கு அறிவோம்.
எனவே நிஷாந்தினி மேலும் பற்பல சாதனைகளை நிலைநாட்டி உயர்ந்திட எமது நல்வாழ்த்துக்கள்.

இவ்வண்ணம்,
**திரு திருமதி பாலசுப்பிரமணியம்**
**P.Balasubramaniam**, J.P.(whole island)
17, inner fairline road, Dehiwala

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரணியின் புதல்வி **நிஷாந்தினியின் ஆடலுக்கு என் வாழ்த்து**



ஈழத்தின் அடி நாதங்களைக் காவிச்சென்று உலகின் மேனிகளில் ஒட்டிவைக்கும் கலைசார்ந்த காரியங்கள் கண்ணுக்கு மட்டுமல்ல, நெஞ்சுக்கும் நிறைவு தரும் அனுபவம். நமது தொல் இலக்கியங்களில் சொல்லப்படுகின்ற காதலும், வீரமும் பாலவர்களின் பாட்டும் கூத்துமாய் என்ற மண்வாசனை கூறும் வரிகள் வரணி எனும் மண்ணுக்கும் சாலப்பொருத்தமானது. ஏனெனில் அரங்கேற்றம் காணும் இராசநாதன் கமலாம்பிகை இணையரின் நிஷாந்தினியும் வரணியின் புதல்வி ஆய்வாளர்களின் கூற்றுப்படி பரதநாட்டியம் என்று அழைக்கப்படும்.

இந்த கலை தொன்மையான காலத்தில் திருச்சதிர் என்று சொல்லப்பட்டது. தேவர் அடியார்களின் கலையாக தமிழ்கலையாக அது வரலாற்றில் உள்ளபோதும் கலை ஓட்டத்தில் தமிழ் அடையாளங்கள் மறைக்கப்பட்டு வேறு மொழியாரின் கலையாக அடையாளமாகக் காணப்படுவது துரதிஸ்டம். இருப்பினும் மீண்டும் தமிழ் அடையாளங்களுடன் கூடிய கலையாக இதை மீட்டெடுக்கும் காலப்பணிகளில் பல முன்னோடிகள் முனைப்புக்கொண்டுள்ள இக்காலத்தில் இந்த நாட்டியக் கலையைக் கற்று அதை அரங்கேற்றம் செய்யும் இராசநாதன் நிஷாந்தினி போன்றவர்கள் கலைக்கடமைக்கு அர்ப்பணம் செய்ய வருகின்றவர்க்கே பார்க்கப்படுகிறார்கள். இக்கலைகளின் அரங்குள் ஊடாகவே எங்கே தொலைவில் இருக்கின்ற தாயகத்தின் இதயக்கருக்களை கொண்ட நாட்டிய அரங்குகள் ஆடப்படாமல் மௌனமாய் இரக்கின்றது. எனவே தான் அந்த மௌனத்தின் காத்திரமான மொழிகளை அரங்குகளுக்கு கொண்டுவந்து நெஞ்சை நெகிழவைக்கம் அரங்குளை புலம்பெயர் தமிழர்கள் திறக்கும் காலமாகவே இருக்கலாம். நம்முன் விரிகிறது அதற்கு நிஷந்தினியின் அரங்கேற்றமும் துணையாய் அமையும். கலை நாடு என்று சொல்லக்கூடிய தமிழ் நாட்டிலும்  நாட்டியயத்தை கற்றும் தன் குருவான திருமதி சிவறஜி சிவகுமாரிடம் நுணுக்கங்களையும் ஆசிகளையும் பெற்று நிஷாந்தினி அரங்கேறுவது நல்ல அனுபவழி. கால் பெயர்த்தாடும் இந்த கலைமகள் ஊர் வேர் பெயர் சொல்ல புகழ்பெற வாழ்த்துக்கள்.

நன்றி

**சிவஞானம் சிறீதரன்**
பாராளுமன்ற உறுப்பினர் (தமிழ்தேசிய கூட்டமைப்பு)
இலங்கை.



வவுனியா மேல் நீதிமன்ற முன்னாள் பதிவாளரும்,
அகில இலங்கை சமாதான நீதவானும் செல்வி நிஷாந்தினியின் உறவினருமாகிய
**திரு கதிர்காமர் வைரித்தம்பி அவர்களின்**
**வாழ்த்துச் செய்தி.**

எல்லாம் வல்ல வரணி ஆழ்வார்மடம் முருகப் பெருமானின் அருங்கருணையால் திரு.வீ. இராசநாதன் கமலா தம்பதியினரின் அருமை மகள் நிஷாந்தியின் தமிழ் நாட்டில் இருந்த பாடசாலைக் கல்வியோடு, கலாஷேஸ்திராவில் நடனக் கலையைப் பயின்று பட்டம் பெற்று அதேபோன்று ஒரு நடன வகுப்பை நடத்திய ஆசிரியர் திரு நித்தீஸ்குமாரிடம் நடனத்தை முறையாகப் பயின்று பின்பு லண்டன் மாநகர் வந்து இங்கேயும் நடன ஆசிரியை திருமதி சிவறஜி சிவகுமார் அவர்களிடமும் பயின்று இன்று அரங்கேற்றம் காணுகின்ற செல்வி நிஷாந்தினியின் அரங்கேற்றம் வரணி சுட்டிபுரம் அம்பாளின் நற்கருணையால் சீரும் சிறப்புமாக நடைபெற அம்பாளை வேண்டுவதோடு எமது ஆசியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவர் பளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கோவில்வயல் என்னும் கிராமத்தை உள்ளடக்கிய முள்ளிப்பற்று பிரிவின் உடையாராக இருந்த திரு முருகர் கந்தையா அவர்களின் மகன் திரு. முருகேசுவின் இளைய மகளின் புதல்வியாவார். இவர் கல்வியில் சிறந்து விளங்கியதோடு கலையையும் பயின்றுள்ளார். இவரின் கலைவழி மென்மேலும் பிரபல்யம் அடைந்து சீரும் சிறப்புமாக பலகாலம் நிறைவோடு வாழ இவரை வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

**கதிர்காமர் வைரித்தம்பி**
**இலண்டன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு துரைராஜா பாலசுப்ரமணியம் அவர்களின் (சட்டத்தரணி இலண்டன்) வாழ்த்துச் செய்தி.



இறைவனால் படைக்கப்பட்ட இந்த உலகத்தின் இயக்கத்திற்கு இறைவனுடைய அசைவே மூலமாக அமைகின்றது என்பது ஆன்றோர் வாக்கு. இதுவே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்ற ஐம்பெரும் தத்துவங்களையும் அடிப்படையாகக் கொண்டதே பரதமாகும். நடன நாயகனாக விளங்கும் நடராஜப் பெருமானின் அருள்பொழியும் திருவடிகளால் இன்று உலகம் மகிழ்ச்சியடைகின்றது என்றால் அதுவே நாம் செய்த புண்ணியமாகும்.

அத்தகைய சிறப்புடைய இக்கலையைப்பயிலும் ஒவ்வொரு குழந்தையையும் நாம் ஒவ்வொரு சிவ அம்சமாகவே பார்க்க வேண்டும். அத்தகைய சிறப்புமிக்க நிகழ்ச்சியாக நிகழவிருக்கும் 2012 மார்க்கழித்திங்கள் 16ம் நாள் செல்வி நிஷாந்தினி இராசநாதனின் பரதநாட்டிய அரங்கேற்றம் நிகழ்விற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைகின்றேன். செல்வி நிஷாந்தினி இந்த நாட்டிற்கு வந்ததிலிருந்தே நான் நன்கு அறிவேன். அவருடைய புத்திக்கூர்மையும் பரதநாட்டியத்தின்மேல் அவருக்கிருந்த திறமையும் எனக்கு மிகுந்த வியப்பையும் மகிழ்ச்சியையம் ஏற்படுத்தியது. சிறுவயதில் அவருக்கு பரதநாட்டியத்தின் மேலுள்ள ஆர்வமும் திறமையும் பாராட்டுதற்குரிய விடயமாகும்.

செல்வி நிஷாந்தினி இராசநாதன் யாழ் மாவட்டம் வரணியூர் கரம்பைகுறிச்சியை சேர்ந்தவராவார். இவர் தனது ஆரம்ப பரதநாட்டியக்கல்வியை கலாஷேத்திரா நடனப்பள்ளியில் பயின்று பின்னர் நிதிஸ்குமார் என்பவரிடம் சென்னையில் பயின்றார். பின்பு தொடர்ந்து தனது நடனக்கல்வியை திருமதி சிவறஜி சிவகுமாரிடம் பயின்று இன்று தனது திறமையாலும் முயற்சியாலும் அரங்கேற்றம் செய்யும் நிலையை எய்தியுள்ளார்.

ஓர் திறமையுள்ள மாணவிக்கு அவரது திறமையை வெளிக்கொணர்வதற்கு ஓர் ஆற்றலும் திறமையும் மிக்கதொரு குரு அவசியம். செல்வி நிஷாந்தினியின் அதிஷ்டம் அவர் இலண்டனிலே சிவ நர்த்தனாலயா நடனப்பள்ளி ஆசிரியை திருமதி சிவறஜி சிவகுமாரை சந்தித்தது என்று சொன்னால் மிகையாகாது. திருமதி சிவறஜி சிவகுமார் அவர்களால் நிகழ்த்தப்பட்ட பரதநாட்டியக் கலைநிகழ்ச்சியைப் பார்க்கும் ஓர் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அந்த நிகழ்ச்சியில் அவரின் கடின உழைப்பும் திறமையும் அநாசயமாக வெளிப்பட்டிருந்தது. அவரால் பயிற்றப்பட்ட மாணவிகள் அந்நிகழ்ச்சியில் பங்குபற்றியிருந்தார்கள். அது ஓர் அற்புதமாக பரதநாட்டிய கலை நிகழ்வாகும். அந்நிகழ்ச்சியல் பங்குபற்றிய அத்தனை மாணவிகளும் மிகத்திறமையாக நடனமாடியிருந்தார்கள். அந்நிகழ்ச்சிக்கு மகுடம் வைத்தாற்போல அமைந்திருந்தது செல்வி நிஷாந்தினியின் நடனமாகும்.

செல்வி நிஷாந்தினி இராசநாதன் பரதநாட்டியத்தில் மட்டுமல்ல ஓவியம், சங்கீதம் என்பவற்றிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அழகான ஓவியங்கள் வரைவதிலே அவரது திறமை அளப்பரியது. அவர் எனக்கு தனது கையால் வரைந்து அழகாக பிரேம் செய்து கொடுத்த விநாயகர் படம் இன்றும் எனது சுவாமியறையிலே வைத்துள்ளேன்.

இத்தனை திறமையுள்ள செல்வி நிஷாந்தினி எதிர்காலத்திலே மிகச்சிறந்த ஓர் பரதநாட்டிய நடனமணியாக வருவார் என்பதிலே எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு.

மேலும் எதிர்காலத்தில் பரதநாட்டியத்திலே பல சாதனைகள் புரிந்து ஓர் அற்புதமான நரத்தகியாக மலர ஓர் நாட்டியப்பேரொளியாக மிளிர எனது நல்வாழ்த்துக்களும் ஆசிகளும் என்றென்றும் உண்டு.

திரு துரைராஜா பாலசுப்ரமணியம்
சட்டத்தரணி இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Our Sincere thanks to

## The Guru
Smt. Sivaraji Sivakumar

## The Chief Guest
Smt. Vasunthara Sivasothi

## The Special Guest
Amuthu Arasan OFFAL Co-ordinator UK

## The Comperes
Mrs.Subashini Sundareswaran

Mr. Dinesh Kumar

## The Accompanying Artists

The General Manager &

The Staff at Winston Churchill Hall

## Sound & Lighting
Balan (Kenton Sound)

## Vedio & Photography
Jano Videos, Photos & Consultancy

## Makeup
Geetha Jason

## Decoration
Gold star Creation (Mr & Mrs Sivam)

## Brochure Designed & Printed
JR Print (JR Digital London Ltd)

## Tailors
Renuka Tailor (India)

Indu Mohan (India)

Sivam (London)

## Catering
Ruby's Catering

## Helpers
Students & Parents of


Shivanarthanalayam



*And finally,*
*all our friends & families who helped make tonight*
*such a special evening for us,*
*without whom all this would not have been possible*

Rasanathan, Kamalambikai, Nishanthan, Nishanthini

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed at JR Print, Tel : 0208 503 6643